உ
சிவமயம்
ஶ்ரீ மஹாதேவ ஜயம்

॥ शिवाष्टकम् ॥

॥ ஶிவாஷ்டகம் ॥

தமிழ் உரை:
Dr. **ந. கங்காதரன்** M.A, M.Litt., Ph.D.

प्रभुं प्राणनाथं विभुं विश्वनाथं
जगन्नाथनाथं सदानन्दभाजम् ।
भवद्भव्यभूतेश्वरं भूतनाथं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ १ ॥

ப்ரபு4ம் ப்ராணநாத2ம் விபு4ம் விஶ்வநாத2ம்
ஜக3ந்நாத2நாத2ம் ஸதா3னந்த3பா4ஜம் ।
ப4வத்3ப4வ்யபூ4தேஶ்வரம் பூ4தநாத2ம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு4மீஶானமீடே3 ॥ 1 ॥

1. பிரபுவானவரும், ஆருயிர்த் தலைவரும், பெருந்தகையும், உலகனைத்தையும் ஆள்பவரும் உலகின் தலைவரான திருமாலுக்கும் தலைவரும், எப்பொழுதும் ஆனந்தத்துக்கு உறைவிடமானவரும், முக்காலத்திற்கும் அதிபதியானவரும், பூத கணங்களின் தலைவரும், மங்களமானவரும், நன்மை பயப்பவரும், சம்புவெனப்படுபவருமான ஈசானரை (சிவபிரானை) வணங்குகின்றேன்.

சிவம் என்றால் மங்களஸ்வரூபி. சங்கரன் என்பது நன்மையைச் செய்பவர் என்ற பொருள் தரும். சம்பு என்றால் சுகத்துக்கு இருப்பிடமானவர். பிரபு என்னும் சொல்லிற்கு வல்லமையுள்ளவர் அல்லது காப்பவர் என்று பொருள். விபு என்னும் சொல்லற்கும் ஏறக்குறைய அதே பொருளாகும். மேலும் வருமிடங்களில் இச்சொற்களுக்கு இவ்வாறே பொருள் கொள்க.

गले रुण्डमालं तनौ सर्वजालं
महाकालकालं गणेशाधिपालम् ।
जटाजूट मंगोचरङ्गैर्विशालं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ २ ॥

க3லே ருண்ட3மாலம் தனௌ ஸர்வஜாலம்
மஹாகாலகாலம் க3ணேஶாதி4பாலம் ।
ஜடாஜூட மங்கோ3சரங்கை3ர்விஶாலம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு4மீஶானமீடே3 ॥ 2 ॥

2. தலையற்ற உடலைக் கழுத்தில் மாலையாயணிந்தவரும், அரவக் கூட்டங்களைத் தன்னுடலில் அணிந்தவரும், காலனுக்கும் காலனானவரும், ஆனைமுகத்தோனுக்குத் தலைவனும், சடை முடியில் தடையுற்ற அலைகளினால் (கங்கையின் அலைகள்) சிறந்து விளங்குபவரும், மங்களமானவரும், நன்மைபயப்பவரும், சம்பு எனப்படுபவருமான ஈசானரை வணங்குகின்றேன்.

"மஹாகாலகால" என்னும் சொல்லை, பிரளய காலத்தில் சிவனைக் குறிக்கும் மஹாகாலராகவும் மற்றும் கால வடிவானவர் என்றும் கொள்ளலாம்.

मुदामाकरं मण्डनं मण्डयन्तं
महामण्डलं भस्मभूषाधरं तम् ।
अनादिं ह्यपारं महामोहमारं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ३ ॥

முதா3மாகரம் மண்ட3னம் மண்ட3யந்தம்
மஹாமண்ட3லம் ப4ஸ்மபூ4ஷாத4ரம் தம் ।
அநாதி3ம் ஹ்யபாரம் மஹாமோஹமாரம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு4மீஶானமீடே3 ॥ 3 ॥

3. மகிழ்ச்சிக்கு உறைவிடமானவரும், அழகுக்கு அழகூட்டுபவரும், சிறந்து ஒளிர்பவரும், சாம்பலை அணிகலனாக அணிந்தவரும், தொன்று தொட்டு இருப்பவரும், முடிவற்றவரும், கொடிய மயக்கத்தைக் களைபவரும், மங்களமானவரும். நன்மை பயப்பவரும், சம்பு எனப்படுபவருமான ஈசானரை வணங்குகின்றேன்.

'மண்டனம் மண்டயந்தம்' என்னும் இரு சொற்களுக்கு அணிகலன்களை அணிந்து சிறந்து காட்சி அளிப்பவர் என்று பொருள். தோற்றம், முடிவு இவ்விரண்டு மற்றவர் சிவனார். உலகப்பொருள்களின் மீது பற்று என்னும் மிக்க கொடிய மயக்கத்தைக் களைபவரும் அவரே.

तटाधोनिवासं महाट्टाहासं
महापापनाशं सदा सुप्रकाशम् ।
गिरीशं गणेशं सुरेशं महेशं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ४ ॥

தடாதோ⁴நிவாஸம் மஹாட்டாஹாஸம்
மஹாபாபநாஶம் ஸதா³ ஸுப்ரகாஶம் ।
கி³ரீஶம் க³ணேஶம் ஸுரேஶம் மஹேஶம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு⁴மீஶானமீடே³ ॥ 4 ॥

4. தடத்தினடியில் வசிப்பவரும், மிகவும் அச்சுறுத்தும் சிரிப்பை உடையவரும், பெரும் பாவங்களை அழிப்பவரும், எப்பொழுதும் நன்கு ஒளிர்பவரும், மலைக்கரசனும், கணங்களுக்குத் தலைவரும், தேவர்களுக்கு அதிபரும், மிகச்சிறந்த தலைவரும், மங்களமானவரும், நன்மை பயப்பவரும் சம்பு எனப்படுபவருமான ஈசானரைப் போற்றுகின்றேன்.

'தடம்' என்னும் சொல்லிற்கு மலைச் சரிவு, ஆகாயம், கரை முதலிய பொருள் கள் உண்டு. சிவனார் கைலாயத்தில் வசிப்பவராதலாலும் கைலாசம் வானளாவி நிற்பதாலும் வானத்தின் முகட்டில் கைலையில் வசிப்பவர் என்று கொள்ளலாம்.

गिरिन्द्रात्मजासङ्गृहीतार्धदेहं
गिरौ संस्थितं सर्वदाऽऽसन्नगेहम् ।
परब्रह्मब्रह्मादिभिर्वन्द्यमानं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ५ ॥

கி³ரிந்த்³ராத்மஜாஸங்க்³ருஹீதார்த⁴தே³ஹம்
கி³ரௌ ஸம்ஸ்தி²தம் ஸர்வதா³(ஆ)ஸன்னகே³ஹம் ।
பரப்³ரஹ்மப்³ரஹ்மாதி³பி⁴ர்வந்த்³யமானம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு⁴மீஶானமீடே³ ॥ 5 ॥

5. மலைமகளினால் தன் உடலில் ஒரு பகுதி ஆக்ரமிக்கப்பட்டவரும், மலையில் உறைபவரும், எப்பொழுதும் மயானத்தில் இருப்பவரும், பரப்ரம்ம வடிவினரும், நான்முகன் முதலானவர்களால் வணங்கப் பெற்றவரும், மங்களமானவரும், நன்மை பயப்பவரும், சம்புவெனப்படுபவருமான ஈசானரைப் போற்றுகின்றேன்.

“ஸர்வதாஸன்ன கேஹம்” என்னும் சொற்றொடரில் ஆஸன்ன என்னும் சொல் சாகப்போகிறவனைக் குறிக்கிறது; கேஹம் என்றால் வீடு என்று பொருள் ஆகையால் மயானத்தில் இருப்பவர் என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

कपालं त्रिशूलं कराभ्यां दधानं
पदाम्भोजनम्राय कामं ददानम् ।
बलीवर्दयानं सुराणां प्रधानं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ६ ॥

கபாலம் த்ரிஶூலம் கராப்⁴யாம் த³தா⁴னம்
பதா³ம்போ⁴ஜனம்ராய காமம் த³தா³னம் ।
ப³லீவர்த³யானம் ஸுராணாம் ப்ரதா⁴னம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு⁴மீஶானமீடே³ ॥ 6 ॥

6. மண்டை ஓட்டையும், திரிசூலத்தையும் தனது கைகளில் தாங்குபவரும், திருவடித் தாமரைகளை வணங்குபவருக்கு விரும்பியதைக் கொடுப்பவரும், எருதை வாகன முதன்மையானவரும், தேவர்களில் முதன்மையானவரும், மங்களமானவ ரும், நன்மை பயப்பவரும், சம்புவெனப்படுபவருமான ஈசானரைப் போற்றுகின்றேன்.

शरच्चन्द्रगात्रं गणानन्दपात्रं
त्रिनेत्रं पवित्रं धनेशस्य मित्रम् ।
अपर्णाकलत्रं सदा सच्चरित्रं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ७ ॥

ஶரச்சந்த்³ரகா³த்ரம் க³ணாநந்த³பாத்ரம்
த்ரிநேத்ரம் பவித்ரம் த⁴னேஶஸ்ய மித்ரம் ।
அபர்ணாகலத்ரம் ஸதா³ ஸச்சரித்ரம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு⁴மீஶானமீடே³ ॥ 7 ॥

7. சரத்ருதுவின் (இலையுதிர் கால) நிலவையொத்த உடலை உடையவரும், குணங்களுக்கு உறைவிடமானவரும், முக்கண்ணரும், புனிதமானவரும், குபேரனு க்கு நண்பரும், அபர்ணையை மனைவியாய் உடையவரும், விநோதமான நடத்தை உடையவரும், மங்களமானவரும், நன்மை பயப்பவரும், சம்புவெனப்படுபவருமான ஈசானரைப் போற்றுகின்றேன்.

சரத்ருது என்பது ஐப்பசி, கார்த்திகை என்ற இரண்டு மாதங்கள் அடங்கிய காலத்தைக் குறிக்கும். இதனை இலை யுதிர் காலம் எனவும் கூறுவர்.

'அபர்ணா' என்பது மலைமகளின் ஒரு பெயர். சிவனாரை அடையத் தவமியற் றியபொழுது தானாகக் கிடைத்த காய், கனி, சருகுகளைக் கொண்டு உயிர்வாழ்ந்த மலைமகள் பின்னர் அதையும் துறந்தமையால் 'அபர்ணை' என்றழைக்கப்பட்டாள். 'பர்ணம்' என்றால் இலை 'அபர்ணம்' என்றால் அதுவுமற்ற என்று பொருள்.

हरं सर्पहारं चिताभूविहारं
भवं वेदसारं सदा निर्विकारम् ।
श्मशाने वसन्तं मनोजं दहन्तं
शिवं शङ्करं शम्भुमीशानमीडे ॥ ८ ॥

ஹரம் ஸர்பஹாரம் சிதாபூ⁴விஹாரம்
ப⁴வம் வேத³ஸாரம் ஸதா³ நிர்விகாரம் ।
ஶ்மஶானே வஸந்தம் மனோஜம் த³ஹந்தம்
ஶிவம் ஶங்கரம் ஶம்பு⁴மீஶானமீடே³ ॥ 8 ॥

8. (இன்னல்களைப்) போக்குபவரும், அரவத்தை அணிகலனாக உடையவரும், சிதையினின்று தோன்றிய (சாம்பலை) அணிந்தவரும், வாழ்க்கைச் சுழலைத் தோற்று விப்பவரும். மாறுதல் மறைகளின் ஸாரமானவரும், எப்பொழுதும் எதுவுமற்றவரும், மயானத்தில் வசிப்பவரும், காமனை எரித்தவரும், மங்களமானவரும், நன்மைபயப்ப வரும், சம்புவெனப்படுபவருமான ஈசானரைப் போற்றுகின்றேன்.

स्तवं यः प्रभाते नरः शूलपाणेः
पठेत् सर्वदा भर्गभावानुरक्तः ।
स पुत्रं धनं धान्यमित्रं कलत्रं
विचित्रैः समाराध्य मोक्षं प्रयाति ॥ ९ ॥

ஸ்தவம் யঃ ப்ரபா⁴தே நரঃ ஶூலபாணேঃ
படே²த் ஸர்வதா³ ப⁴ர்க³பா⁴வானுரக்தঃ ।
ஸ புத்ரம் த⁴னம் தா⁴ன்யமித்ரம் கலத்ரம்
விசித்ரைঃ ஸமாராத்⁴ய மோக்ஷம் ப்ரயாதி ॥ 9 ॥

9. சூலத்தைக் கையில் தரித்தவரின் மீதான இந்தத் துதியை எவனொருவன் சிவனாரிடம் ஈடுபாடு கொண்டவனாக விடியற்காலையில் படிக்கின்றானோ, அவன் புத்திரப் பேறு, செல்வம், தானியம், நண்பர்கள், அழகிய மனைவி முதலியன யாவும் பெற்றுப் பின்னர் மோக்ஷத்தை அடைகின்றான்.

'பர்க்கன்' என்பது சிவபிரானின் திருப்பெயர்களில் ஒன்று, (தன்னை வழிபடுவோர்களது) பாவங்களை வறுத்தெடுத்து அழிப்பவர் என்பது பொருள்.

குறிப்பு - பாம்பின் நடையை ஒத்த அமைப்புடைய புஜங்க பிரயாதம் என்னும் விருத்தத்தில் அமைந்துள்ள இந்த அரிய ஸ்தோத்திரத்தை அருளியது யார் எனத் தெரியவில்லை.

॥ इति शिवाष्टकं सम्पूर्णम् ॥

॥ இதி ஶிவாஷ்டகம் ஸம்பூர்ணம் ॥

சிவாஷ்டகம் முற்றிற்று.
சிவம்